

முதல்வர், கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் நமது மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதையொட்டி திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி முன்னிலையில் பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறை முகங்கள் அமைச்சர் எ.வ.வேலு பொன்னேரி பகுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் இடத்தையும், திருப்பத்தூரில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் திருவுருவச் சிலை நிறுவப்பட உள்ள இடத்தையும் நேரில் சென்று பார்வையிட்டு விழா ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். இந்நிகழ்வில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வ நாதன், நகர செயலாளர் எஸ்.ராஜேந்திரன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை பாளையங்கோட்டையில்

# ரூ.70 இலட்சத்தில் சாலை அமைக்கும் பணி!

## மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

நெல்லை.ஜூன்.9

நெல்லை பாளையங்கோட்டை மண்டலம் 36 வது வார்டு கோரிப்பள்ளம் பகுதியில் ரூபாய் 70 லட்சத்தில் புதிய தார் சாலை அமைக்கும் பணியை நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ.துவக்கி வைத்தார்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பொதுமக்களின் கோரிக்கைகளையும், அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பல்வேறு திட்டபணிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்.

மேலும் திராவிட மாடல் முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும்,கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி,கழக முதன்மைச் செயலாளர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர், நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என்.நேரு அறிவுறுத்தலின் படி, மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுவின் தீர்மானங்களை கருத்தில் கொண்டும் செல்லும் இடங்களில் எல்லாம் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும் வருகிறார்.

அதன்படி பாளையங்கோட்டை மண்டலம் 36 வது வார்டு கோரிப்பள்ளம் பகுதியிலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் முன்பு இருந்து ஏஞ்சலோ மெட்ரிக் பள்ளி வரையிலும் ரூபாய் 70 லட்சம் மதிப்பில் தார் சாலை அமைக்கும் பணியை கோரிப்பள்ளம் பகுதியில் நடைபெற்ற விழாவில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு. அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. பங்கேற்று தார் சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர். ராஜு, நெல்லை மேற்கு மாநகர செயலாளர் தினேஷ்,பாளை மண்டல உதவி ஆணையர்

புரந்தரதாஸ், உதவி செயற்பொறியாளர் தங்கப்பாண்டியன்,பாளை தொகுதி செயலாளர்கள் (வடக்கு)அண்டன் செல்லதுரை (தெற்கு) செய்யது முகைதீன் மேலப்பாளையம் (கிழக்கு)சாமுவேல் தச்சை (வடக்கு) டாக்டர் சங்கர், வட்டச் செயலாளர்கள் ஜெயின்உசேன்,மேகை செல்வம்,ராபர்ட் செல்லையா,மாமன்ற உறுப்பினர்கள் சின்னத்தாய், சுப்பு லட்சுமி, மாநகரப் பிரதிநிதி பாலன் என்ற ராஜா, வட்ட பிரதிநிதிகள் கிருஷ்ணன், குணா டாஸ்மாக் தொழிற் சங்கம் மாவட்ட தலைவர் அரசன் ராஜ்,மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனித்தா, விளையாட்டு அணி அமைப்பாளர் அன்னராஜ்,தச்சை பகுதி இளைஞரணி அமைப்பாளர் மகேஷ் ஆதித்தன், மானூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கானார் பட்டி சாமுவேல், பாளை சதீஷ்,வாசுகி செல்லதுரை உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் விஜயகுமார் தலைமை!

# செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் கலைஞர் பிறந்தநாள் விழா!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி ஜூன் 9.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்தநாள் விழா அப்பம் பட்டு கூட் ரோட்டில் நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளரும், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.தலைமையில் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டுஅமைதி ஊர்வலமாக சென்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து ஏழை எளிய பொதுமக்களுக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. பிரெட்,பிஸ்கட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில், வல்லம் ஒன்றிய சேர்மன் அமுதா ரவிக்குமார், மாவட்ட கவுன்சிலர்அரங்க ஏழுமலை,பொதுக்குழு உறுப்பினர்மணிவண்ணன், ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம், வாசு, அனுசுயா மணிபாலன், இக்பால்,குமார், செல்வமணி, மதியழகன், ரவி, அன்வர், முன்னாள் கவுன்சிலர் ரேவதி கணேசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் முன்வர், தனலட்சுமி அன்பழகன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பழனி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, வழக்கறிஞர் அரவிந்தராஜ்,நிர்வாகிகள் சிவக்குமார், மணி வண்ணன், மணிமாறன், வெங்கடேசன், சுப்பரமணி, சேகர், இளைஞர் அணி அமைப்பாளர் ஜம் போதி பழனி, துணை அமைப்பாளர் செஞ்சி பழனி,செந்தில், கோனை, அப்பம்பட்டு நிர்வாகிகள் காந்தி, ஏ.ஆர்.அன்வர், முரளி, வசந்த், தனபால், லூர்து, பாரூக், அல்லி முத்து, வெங்கடேசன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## என்.எம்.மாரி தலைமையில் நிர்வாகிகள் பங்கேற்பு!

மதுரை, ஜூன் 9 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 ஆவது பிறந்த நாள் "செம்மொழி நாளை" முன்னிட்டு 03.06. 2025 அன்று காலை 10 மணி அளவில் மதுரை சிம்மக்கல் ரவுண்டா பகுதியில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றத் தலைவர் என்.எம். மாரி தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் இலக்கிய மன்ற புரவலர் அரிமா மகா. கணேசன், துணைத் தலைவர்கள் டி.வி.அழகர், ச.செல்வக்குமரன், துணைச் செயலாளர்கள் மு.வெங்கடேசுவரன், லெ. முருகேசன், செயற்குழு உறுப்பினர்கள் லெ. வெள்ளைச்சாமி, நிழற்பட வல்லுனர் ரெ. கார்த்திகேயன் சிறப்பு அழைப்பாளர்கள் புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் "பெரியார் நெறியாளர் " பி. வரதராசன், திராவிட இயக்க தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் இராம.வைரமுத்து, சிறுபான்மை நல உரிமைச் பிரிவினர் மாவட்ட அமைப்பாளர் கா.அ. உஸ்மான் அலி, குறும்பா பாவலர் இரா. இரவி, ம.தி.மு.க மாநில தொழிற் சங்கத் தலைவர் மகபூப் ஜான், மாமன்ற மேனாள் உறுப்பினர்கள் ஆர்.எஸ். இராமலிங்கம், கா.ரா. முருகேசன், முரசொலி பாண்டியன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அப்பம்பட்டில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞரின்102வது பிறந்தநாள் விழாவில்.விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம், காட்டுமன்னார்கோவில் எம்.ஆர்.கே.கலையரங்கத்தில் நடைபெற்றது. வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# இல்லங்கள்தோறும் சென்று கழக உறுப்பினர்களைச் சேர்ப்போம்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், ஜூன் 9-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்,07.06.2025, சனிக்கிழமை, பிற்பகல் 12.30 மணி அளவில், காட்டுமன்னார்கோவில் எம்.ஆர்.கே கலையரங்கத்தில், கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், தொகுதி பொறுப்பாளருமான எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் மாவட்ட கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, குறிஞ்சிப்பாடி தெற்கு வி. சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, பரங்கிப்பேட்டை வடக்கு முத்து.பெருமாள், ஆர்.ராஜேந்திரன், குமராட்சி கிழக்கு த.சங்கர், குமராட்சி தெற்கு ம. சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி, குமராட்சி மேற்கு கே.நடராஜன், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தர பாண்டியன்,

கடலூர் கிழக்கு தெ. காசிராஜன், கடலூர் மேற்கு பி.சுப்பிரமணியன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன்,

கடலூர் தெற்கு ஆர். விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு எம்.மனோகரன், புவனகிரி மேற்கு ஏ.எஸ். மதியழகன், கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மத்தி வி.பி.பாலு, கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி, திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், திருமுட்டம் மேற்கு கே. ஆர். கோவிந்தராஜ், குமராட்சி மத்திய என். கே.நடராஜன்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, கடலூர் பகுதி செயலாளர்கள்: ப.நடராஜன், பா. வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர் த. தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ். சிவக்குமார்,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வ.ஞானசேகரன், வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: த.ஜேம்ஸ்.விஜய ராகவன், ச.கல்யாணசுந்தரம், வி.பி.பாலு, மு.வெற்றிவேல், பா.கோதண்டபாணி,

பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், சேத்தியாதோப்பு ப.மனோகரன், திருமுட்டம் பூ.செல்வ குமார், புவனகிரி த.கந்தன், அண்ணாமலை நகர் க.பழனி, லால் பேட்டை எம்.அன்வர்சதாத், பரங்கிபேட்டை பேரூராட்சி மன்றத் தேன்மொழிசங்கர், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞரணி ஜி.கார்த்தி கேயன், மாணவரணி அமைப்பாளர் அப்புசந்தியநாராயணன் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழக தலைவர் அவர்களின் அறிவிப்பினை அமுல்படுத்தும் விதமாக

இல்லங்கள் தோறும் கழக நிர்வாகிகள் சென்று பொதுமக்களை சந்தித்து கழகத்தில் உறுப்பினர்களை சேர்த்திடல் வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

# என்.எல்.சி. தொ.மு.ச. நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைக்கப்பட்டு செயல்பட்டு வரும் என்.எல்.சி. தொ.மு.ச. (3463/SAT பேரவை இணைப்பு எண். 75) நிர்வாகிகள் தேர்தல் தொ.மு.ச. பேரவைச் செயலாளர் நா.தனசேகரன் அவர்களை ஆணையாளராகக் கொண்டு நெய்வேலி என்.எல்.சி. வளாகத்தில் 05.06.2025 அன்று நடைபெற்றது. இத்தேர்தலில் கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**சங்க நிர்வாகிகள் பட்டியல் வருமாறு:**

| | |
|---|---|
| தலைவர் | – **ஞா. ஞானஒளி** |
| பொதுச்செயலாளர் | – **வீ. குருநாதன்** |
| பொருளாளர் | – A. அப்துல் மாஜித் |
| அலுவலகச் செயலாளர் | – R.சீனிவாசன் |
| துணைத் தலைவர்கள் | – 1) C. வீரப்பன் (Mine-I / Operation ) |
| | 2) S.கணபதி (Mine-I / Operation North) |
| | 3) P. மோகன் (Mine-I / Operation South) |
| | 4) A.காதர்பாட்சா (Mine-I A) |
| | 5) G. கிருஷ்ணமூர்த்தி (Mine-II / Operation 1) |
| | 6) R.தியாகராஜன் (Mine-II / Operation II) |
| | 7) S.பரமசிவம் (Mine-II / North) |
| | 8) S.குருசாமி (Mine-II / South) |
| | 9) T.நீலமேகம் (TPS-1 &TPS-1 Expn./NTPL/MNTPS) |
| | 10) P.குமார் (TPS-2 & TPS-2 Expn. ) |
| | 11) S.முருகேசன் (TPS-2 & TPS-2 Expn.) |
| | 12) G.செந்தில்குமார் (New Service Unit (NSU)) |
| | 13) T.திருநாவுக்கரசு (New Service Unit (NSU)) |
| | 14) K.வாசு (T.A. DEP. FIELD) |
| | 15) A.புண்ணியமூர்த்தி (Office -1) |
| | 16) K.வீராசாமி (Office-2) |

**இணைச் செயலாளர்கள்:** 1) P.வேலுசாமி (Mine-1 Operation-1), 2) A.மூர்த்தி (Mine-1 Operation-2), 3) K.அறிவழகன் (Mine-1 South-1), ) 4) R.அங்கமுத்துராஜா (Mine-1 South-2), 5) S.ரவீந்திரன் (Mine-1 North),6) B.முரளி (Mine 1A, OB / OPN), 7) K.பழனிவேல் (Mine-IA Lignite OPN), 8) R.விஜயகுமார் (Mine-II Operation-I), 9) G.ரவிச்சந்திரன் (Mine-II Operation-II), 10) S.ரவிச்சந்திரன் (Mine-II North), 11) P.பழனியப்பன் (Mine-II South),12) K.பாலமுருகன் (T.P.S.-1 & T.P.S.-1 Expn./ NNTPS), 13) J.ஜாகீர் உசேன் (T.P.S.-1 & T.P.S.1 Expn./NTPL), 14) P.K.முருகன் (T.P.S.-2 & T.P.S.-2 Expn.(MTCE)), 15) R.பழனிவேல் (T.P.S.-2 & T.P.S.-2 Expn.(OPN), 16) G.கரிகாலன் (All Canteen), 17) P.வாசுதேவன் (New Service Unit-1), 18) M.காதர்பாட்சா (New Service Unit-2), 19) M.ஆரோக்கியராஜ் (T.A. DEPT. (FIELD)),20) G.ராஜேந்திரன் (Office-1/JS1), 21) S.பிரகலாதன் (Office-1/JS2) 22) R.இளங்கோ (Office-2/JS1) 23) கோபா.சிற்றரசு (Office-2 FIELD OFFICE CARD JS2)

இடம்: கலைஞரகம்
நாள்: 07.06.2025

**மு.சண்முகம், எம்.பி.**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

# சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (09.06.2025 - திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம், **கலைஞர் மாளிகை", வீரபாண்டியார் அரங்கில்"**, மாவட்ட கழக அவைத் தலைவர் **பி.தங்கமுத்து** தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள்-முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்று சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**
1) கழக உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து.
2) கழக தலைவர், **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் சேலம் மேற்கு மாவட்டம், மேட்டூர் வருகை குறித்து.
3) கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**டி.எம்.செல்வகணபதி**
செயலாளர்
சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க.



தேனி தெற்கு மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் சின்னமனூர் தனியார் மண்டபத்தில் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மகாராஜன் எம்.எல்.ஏ. மாநில தீர்மானக் குழு இணை செயலாளர் ஜெயக்குமார், அவைத் தலைவர் மனோகரன், கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன். ஆண்டிப்பட்டி தொகுதி பார்வையாளர் ஜி.பி.ராஜா, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டியன், சின்னமனூர் நகர செயலாளர் முத்துக்குமார், பொதுக்குழு உறுப்பினர் தக்காளிஹக்கீம் மற்றும் நகர செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.